**Dated : 06.11.2024**

**O.S.No. 54/2018**

**PW.2 - திரு. சுப்பிரமணி, த/பெ. ராமப்பா**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

காந்தம்மாளுக்கும், சுப்பிரமணிக்கும் என்று, எப்போது, எங்கு வைத்து திருமணம் நடந்தது என்றால் எங்கள் ஊர் குந்தப்பள்ளியில் நடந்தது. மாரியம்மன் கோவிலில் பூஜை முடித்து சுப்பிரமணி வீட்டில் வைத்து திருமணம் நடந்தது. தேதி, மாதம், வருடம் சரியாக ஞாபகமில்லை. தேதி தெரியவில்லை என்றாலும், நாள் சொல்ல முடியுமா என்றால் அதுவும் தற்போது ஞாபகமில்லை. கல்யாண பத்திரிக்கை அடித்தார்களா என்றால் ஆம், அடித்தார்கள். நான் உறவினர் என்று சொல்லும் நிலையில் அந்த கல்யாண பத்திரிக்கை என் வசம் உள்ளதா என்றால் தற்போது இல்லை. வாதி மகேஸ்வரி 6 மாத குழந்தையாக இருக்கும் போதே, காந்தம்மாளை சுப்பிரமணி வீட்டை விட்டு துரத்தியதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். அதற்கு பின்னர் காந்தம்மாளை சுப்பிரமணி சேர்த்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். காந்தம்மாளோ, மகேஸ்வரியோ அதற்கு பிறகு சுப்பிரமணியுடன் எப்போதும் வசிக்கவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணி, தேன்மொழியை திருமணம் செய்து கொண்டு கடைசி வரை அவரோடும், அவரது குழந்தைகளோடும் வசித்து வந்தார் என்றால் ஆம், புளியஞ்சேரியில் வசித்துவந்தார், மற்ற விவரம் எனக்கு தெரியாது. காந்தம்மாளுக்கு குந்தப்பள்ளியை சேர்ந்த வெங்கடேசன் என்பவரோடு தொடர்பு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுப்பிரமணி எனக்கு மாமா என்ற முறையில் காந்தம்மாளை சேர்த்து வைக்க பஞ்சாயத்து செய்தோமா என்றால் இல்லை. தியாகராஜன் எனக்கு என்ன முறையில் உறவினர் என்றால் என் அக்கா மகன். தியாகராஜனின் தகப்பனார் பெயர் பொன்னப்பன் என்றால் சரிதான். பொன்னப்பனும், சுப்பிரமணியும் அண்ணன், தம்பி முறையில் உறவினர் என்றால் சரிதான். அவர்களுக்குள் சொத்து சம்மந்தமாக தகராறு வந்து, காவல் நிலையம் வரை சென்றது என்றால் சரிதான். மகேஸ்வரிக்கு எங்கு, எப்போது, யாருடன் திருமணம் ஆனது என்பது பற்றி தெரியுமா என்றால், தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, ஆனால் மகேஸ்வரிக்கு அவரது தாய்மாமனுடன் திருமணம் ஆனது. வாதி மகேஸ்வரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண் குழந்தைகள். பெயர், விவரம் தெரியுமா என்றால் தெரியாது, அவர்கள் வேறு ஊரில் வசிக்கிறார்கள், எங்கு என்றால் ஓசூரில் வசிக்கிறார்கள். அவர்கள் குந்தப்பள்ளிக்கு வருவதில்லை என்றால் சரிதான். தியாகராஜன் மற்றும் சுப்பிரமணி வீட்டாருக்கு இடையே சொத்து தகராறு இருந்ததால், அவர்கள்

இருவருக்கும் ஆகாது என்றால் சரிதான். தியாகராஜன் என் அக்கா மகன் என்பதாலும், சுப்பிரமணி குடும்பத்தாருடன் அவருக்கு பிரச்சனை இருந்தது என்பதாலும், தியாகராஜன் தூண்டிவிட்டு மகேஸ்வரி இந்த வழக்கை தாக்கல் செய்ததில் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணி, காந்தம்மாளை துரத்திவிட்டதாக சொல்லும் நிலையில் காந்தம்மாள் சுப்பிரமணிக்கு எதிராக போலீசில் புகார் கொடுத்தாரா, நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மகேஸ்வரி, சுப்பிரமணி உயிருடன் இருக்கும் வரையில் மகள் என்ற முறையில் அவரிடம் சொத்து கேட்டாரா, வழக்கு ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி சுப்பிரமணி, காந்தம்மாளுக்கும் இடையே திருமணம் நடைபெறவில்லை என்றும், அவர்களின் குழந்தையாக மகேஸ்வரி பிறக்கவில்லை என்றும், மகேஸ்வரி கேட்டுக்கொண்டதின் பேரில் சுப்பிரமணி, காந்தம்மாளின் மகள் மகேஸ்வரி என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணி, காந்தம்மாளை துரத்திவிட்டுவிட்டு தேன்மொழியை திருமணம் செய்த போதேனும், காந்தம்மாள், சுப்பிரமணி மீது போலீசில் புகார் கொடுத்தாரா என்றால் காந்தம்மாள் விவரம் தெரியாதவர். காந்தம்மாள் விவரம் தெரியாதவர் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், காந்தம்மாள், சுப்பிரமணி திருமணம் நடக்கவில்லை என்பதாலேயே அவர் சுப்பிரமணி மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6ம் பிரதிவாதி தரப்பில் 1, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது, 7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA — Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal District Judge,
Krishnagiri.